தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

23.04.2013 A.M

## பருத்தி விலை கண்டிக்கு ரூ.2 ஆயிரம் குறைவு

கையிருப்பில் உள்ள 2.5 லட்சம் பேல் பருத்தியை உள்ளூர் மில்களுக்கு விற்க இந்திய பருத்திக் கழகத்துக்கு மத்திய அரசு உத்தரவிட்டதைத் தொடர்ந்து, பருத்தி விலை கடந்த ஒரு வாரத்தில் கண்டிக்கு ரூ. 2000 வீதம் குறைந்துள்ளது.

இந்திய பருத்திக் கழகம் கடந்த ஜனவரி மாதத்தில் சுமார் 25 லட்சம் பேல் பருத்தியை ஆந்திர மாநிலத்தில் கொள்முதல் செய்தது. இப்பருத்தியை உள்ளூர் மில்களுக்கு விற்குமாறு, தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் பருத்திக் கழகத்துக்கு கோரிக்கை விடுத்தன.

ஆனால் இந்திய பருத்திக் கழகம், பருத்தியை ஏற்றுமதி செய்ய முயன்றது. இதனால் பருத்தி விலை கண்டி ரூ. 34 ஆயிரத்தில் இருந்து ரூ. 40 ஆயிரம் வரை உயர்ந்தது. மேலும் விலை உயரும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இந்த சமயத்தில் சர்வதேச சந்தையில் பருத்தி விலை உயரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு அமைப்புகளின் கோரிக்கை காரணமாக 2.5 லட்சம் பேல் பருத்தியை உள்ளூர் மில்களுக்கு விற்பனை செய்யுமாறு மத்திய ஜவுளித் துறை அமைச்சகம் இந்திய பருத்திக் கழகத்துக்கு அண்மையில் உத்தரவிட்டது. இதையடுத்து, கடந்த ஒரு வாரத்தில் ரூ. 40 ஆயிரத்தில் இருந்து ஒரு கண்டி பருத்தி விலை ரூ. 38 ஆயிரமாகக் குறைந்துள்ளது.

சர்வதேச அளவில் பருத்தி விலை குறைந்து வருவதன் எதிரொலியாக இந்தியாவிலும் பருத்தி விலை குறைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத் தலைவர் எஸ். தினகரன் கூறியது: மத்திய ஜவுளித் துறை அமைச்சகம் உத்தரவிட்டதன் பேரில் 2.5 லட்சம் பேல் பருத்தியை இந்திய பருத்திக் கழகம் உள்ளூர் மில்களுக்கு விற்பனை செய்ய உள்ளது.

இப்போது சர்வதேச அளவில் விலை குறைந்ததால் இந்தியாவிலும் விலை குறைந்துள்ளது. கையிருப்பில் உள்ள பருத்தி முழுவதையும் உள்ளூர் மில்களுக்கு விற்பனை செய்ய மத்திய அரசு உத்தரவிட வேண்டும் என்றார்.

## மல்பரி ரகங்களை நடவு செய்வோருக்கு ஊக்கத் தொகை: அமைச்சர் ப.மோகன்



உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்கப்படும் என ஊரகத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருள்கள் துறை அமைச்சர் ப.மோகன் அறிவித்தார்.

சட்டப் பேரவையில் பட்டு வளர்ச்சி மற்றும் கைவினைப் பொருள்கள் துறையின் மானியக் கோரிக்கை மீது திங்கள்கிழமை நடந்த விவாதத்துக்குப் பதிலளித்து அமைச்சர் வெளியிட்ட அறிவிப்புகள்:

நடப்பாண்டில் 3 ஆயிரம் ஏக்கரில் தரமான மற்றும் அதிக விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.6,750 வீதம் அதிகபட்சமாக 2.50 ஏக்கருக்கு ரூ.16 ஆயிரத்து 875 வரை மொத்தம் ரூ.2 கோடி மானியம் வழங்கப்படும்.

நடப்பாண்டில் ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பிலான மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க, விவசாயிகளுக்கு ரூ.3 கோடி மானியமாக வழங்கப்படும். இளம்புழு வளர்ப்பு மைய விவசாயிகள் அனைவருக்கும் ஓசூரில் உள்ள தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் பட்டுப்புழு வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி உதவித் தொகையாக நபருக்கு ரூ.5 ஆயிரம் வீதம் மொத்தம் 100 இளம்புழு வளர்ப்பு விவசாயிகளுக்கு மாநில அரசால் ரூ.5 லட்சம் மானிய உதவிகள் வழங்கப்படும். பட்டு விவசாயிகளுக்கு பட்டுப்புழு வளர்ப்பு, புழு வளர்ப்புக் குடில் மற்றும் தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணத் தொகையில் 50 சதவீதத்தை மத்திய பட்டு வாரியமும், 40 சதவீதத்தை மாநில அரசும் செலுத்துகின்றன. மீதமுள்ள 10 சதவீதத் தொகையை பட்டு விவசாயி செலுத்தி காப்பீட்டு உதவிகளைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் 10 ஆயிரம் பட்டு விவசாயிகள் பயனடையும் வகையில், ரூ.33.75 லட்சம் காப்பீட்டு கட்டணத் தொகை மானியமாக வழங்கப்படும். வெண்பட்டு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் கடந்த ஆண்டுகளில் தமிழகத்தில் எட்டு இடங்களில் செயல்படுத்தப்பட்ட தொகுப்பு அபிவிருத்தி திட்டம் நடப்பாண்டில் கூடுதலாக 19 இடங்களில் செயல்படுத்தப்படும் என்றார் அமைச்சர் மோகன்.

## விவசாயிகளின் பயிர்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கான வழிமுறைகள் ஆராயவேண்டும்

விவசாயிகளின் விளைபயிர்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கான வழிமுறைகளை ஆராய வேண்டும் என்று கர்நாடக வேளாண்துறை முதன்மைச் செயலர் பரத்லால் மீனா தெரிவித்தார்.

பெங்களூரில் திங்கள்கிழ்மை கர்நாடக மாநில விவசாய விளைபொருள் பதனிடுதல் மற்றும் ஏற்றுமதி கழத்தினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசியது: கர்நாடக விவசாயிகள் பயனடைய வேண்டும் என்ற நோக்கில் தொடங்கப்பட்டதுதான் இந்த கழகம். இதன் செயல்பாடுகளால் ஓரளவிற்கு விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். என்றாலும் விவசாயிகள் முழுமையான பயன் அடைந்துள்ளதாக கருத முடியாது. எனவே விவசாயிகள் பயன் அடையும் வகையில் தொலை நோக்குடன் திட்டங்களை வகுத்து செயல்படுத்த வேண்டும். விவசாயிகளின் பயிர்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கான வழிமுறைகளையும் ஆராய வேண்டும். விவசாயம் சிறப்பாக செயல்பட்டால் மட்டுமே உணவு உற்பத்தியில் நாம் தன்னிறைவை அடைய முடியும். அதற்கு அரசு மட்டுமின்றி, இயற்கையும் உறுதுணையாக இருக்க வேண்டும். பல சமயங்களில் மழை பொய்த்து போவதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக கடந்த ஆண்டு விவசாயத்திற்கு தேவையான விதைகள், உரத்தை மாநில அரசு தயாராக வைத்திருந்தது. ஆனால் மழை பொய்த்து வறட்சி ஏற்பட்டது. இதனால் விவசாய உற்பத்தியில் நாம் நினைத்த இலக்கை அடைய முடியவில்லை. விவசாயம் செழிக்க வேண்டும் என்றால் நீர்பாசத்திற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும். அதிகாரிகள் இதற்கான செயல்திட்டங்களை நடைமுறை படுத்த வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் வேளாண்துறை ஆணையர் வி. சந்திரசேகர், இந்திய பயிர் பதனிடுதல் தொழில் நுட்ப மைய இயக்குனர் அழகு சுந்தரம் உள்ளிட்டோ கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 24.56 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 24.56 அடியாக இருந்தது.அணைக்கு வினாடிக்கு 22 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496

கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## இன்று உழவர் பெருவிழா நடைபெறும் கிராமங்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை பின்வரும் கிராமங்களில் உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) பி. எம்பெருமாள் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை வட்டத்தில் பெருங்கொண்டான்விடுதி, கந்தர்வக்கோட்டை வட்டத்தில் கல்லாக்கோட்டை, திருவரங்குளம் வட்டத்தில் பாலையூர், கொத்தமங்கலம், மாளாக்குடி, கறம்பக்குடி வட்டத்தில் பேயாடிப்பட்டி, வாண்டான்விடுதி, அறந்தாங்கி வட்டத்தில் சுப்ரமணியபுரம், ராயன்வயல், கீழவிஜயபுரம், ஆவுடையார்கோவில் வட்டத்தில் தீயாத்தூர், குளத்தூர், ராமசந்திராபுரம், மணமேல்குடி வட்டத்தில் வினைதீர்த்தகோபாலபுரம், காரக்கோட்டை, தலிக்கோட்டை, திருமயம் வட்டத்தில் அடுகப்பட்டி, அரிமளம் வட்டத்தில் சாமந்தன்வயல், துறையூர், பொன்னமராவதி வட்டத்தில் ஆர்.பாலக்குறிச்சி (வைரவன்பட்டி), அன்னவாசல் வட்டத்தில் பரம்பூர், பின்னங்குடி, விராலிமலை வட்டத்தில் விட்டமாபட்டி, கல்லக்குடி, கோமங்களம், குன்றாண்டார்கோவில் வட்டத்தில் புலியூர் ஆகிய கிராமங்களில் உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன.

## இளைஞர்களை விவசாயத்தின் பக்கம் ஈர்க்க தீவிர முயற்சி

இளைஞர்களை விவசாயத்தின் பக்கம் ஈர்க்க தீவிர கவனம் செலுத்தி வருகிறோம் என்றார் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கி வரும் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மைய செயல்பாடுகள் மற்றும் வேளாண்துறை அலுவலர்கள், விவசாயிகள், கல்லூரி பேராசிரியர்கள், தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தினருடன் திங்கள்கிழமை நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் அவர் அளித்த பேட்டி: பண்ணைப் பள்ளிகள் திட்டத்தை இயக்கமாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். தமிழகத்தில் திண்டுக்கல் மற்றும் தஞ்சை மாவட்டத்தில் பண்ணைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டம் பசுபதிகோவிலைச் சேர்ந்த சிறந்த பெண் விவசாயி விருது பெற்ற கலைவாணி ராஜேந்திரன் பண்ணையில் இப்பள்ளி தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு நிறையச் செய்திகளை அளிக்கவும், விவசாயிகளின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் இந்தப் பள்ளிகள் உதவும்.

நிலத்துக்கு நிலம், விவசாயிக்கு விவசாயி என்ற கோட்பாடுதான் அடிப்படையாகும். மேலும் 5 பண்ணைப் பள்ளிகளைத் தொடங்க இந்தியன் ஓவர்சீஸ் வங்கி உதவி செய்ய உள்ளது.

தமிழகத்தின் நீர் ஆதாரம் குறைந்து வரும் நிலையில், குறைந்த நீர் செலவில் விவசாயம் செய்ய வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டுள்ளது. செம்மை நெல் சாகுபடி விவசாயிகளுக்கு அதிக பயனைத் தருகின்றன. தமிழக அரசு விவசாயிகளுக்கு நிறைய திட்டங்களை அளித்து வருகிறது. இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வு அதிகரித்துள்ளது.

இளைஞர்களின் கவனத்தை விவசாயத்தின் பக்கம் திருப்புவதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறோம். வேளாண் கல்வி முடித்த இளைஞர்களின் நவீன தொழில் நுட்ப அறிவையும் யோசனைகளையும் ஏற்றுக்கொள்வோம். அதிக உணவு உற்பத்திதான் பசுமைப் புரட்சியாகும்.

600 லட்சம் டன் கோதுமை, அரிசி, சோளம் போன்ற உணவுப் பொருள்களை சேமிக்கும் அளவுக்கு கட்டமைப்பு வசதிகள் இருந்ததால்தான் உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை மத்திய அரசால் கொண்டு வரமுடிந்தது என்றார் சுவாமிநாதன்.

மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) க. நாகராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### ஏப். 26-ல் விவசாயிகள்குறைதீர் கூட்டம்

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வெள்ளிக்கிழமை (ஏப். 26) காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த கூட்டத்தில், விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று நீர்ப்பாசனம், வேளாண்மை, இடுபொருள்கள், வேளாண்மை தொடர்பான கடனுதவிகள், விவசாய மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் உள்ளிட்டவைகள் குறித்த விவரங்களை நேரிலோ அல்லது மனுக்கள் மூலமாகவோ தெரிவித்து பயன் பெறலாம் என மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 24.56 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 24.56 அடியாக இருந்தது.அணைக்கு வினாடிக்கு 22 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு வழங்க வலியுறுத்தல்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியது.

கிருஷ்ணகிரியை அடுத்த சின்னபெல்லாரம்பள்ளி கிராமத்தில் தமிழக விவசாயிகள் சங்க கிளைத் துவக்க விழா திங்கள்கிழமை நடைபெற்றது. விழாவிற்கு மாவட்டத் தலைவர் பெருமா தலைமை வகித்தார். கிளை நிர்வாகிகள் கிருஷ்ணன், வெங்கடசாமி, நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கிளைத் தலைவர் ராஜன் வரவேற்றார். தமிழக விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலர் கே.எம்.ராமகவுண்டர் புதிய கிளையைத் துவக்கி வைத்துப் பேசினார்.

அவர் பேசியது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடும் வறட்சி, மழையின்மை காரணமாக அனைத்து விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, நிலம் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் இழப்பீடு வழங்கிட வேண்டும். அனைத்துக் கிராம சாலைகளையும் தார் சாலைகளாக மாற்றிட வேண்டும்.

தண்ணீர் ஓடும் ஓடைகள் அனைத்திலும் ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு தடுப்பணை கட்டி நிலத்தடி நீரைப் பெருக்கிட வேண்டும். சின்னபெல்லாரம்பள்ளிக்கு போதிய பேருந்து வசதி செய்து தர வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தருமபுரி சுற்றுப் பகுதியில் மழை

தருமபுரி மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் திங்கள்கிழமை மழை பெய்தது.

தருமபுரி மாவட்டத்தில் நிகழாண்டில் கோடை வெயிலின் தாக்கம் கடந்த ஆண்டைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. கடந்த சில நாள்களாக வெப்பத்தின் அளவு 100 டிகிரியைத் தாண்டியுள்ளது.

தொடர் வறட்சியின் காரணமாக மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் தருமபுரி, பாலக்கோடு மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் திங்கள்கிழமை மழை பெய்தது. தருமபுரியை சுற்றியுள்ள சோலைக்கொட்டாய், ராஜாபேட்டை, டீக்கடை, பழைய தருமபுரி, மாட்லாம்பட்டி, குண்டலஹள்ளி ஆகிய பகுதிகளிலும், பாலக்கோடு மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் இடியுடன் கூடிய மழை பெய்தது.

## விவசாயிகளுக்கான ஆலோசனை இனி நவீன மயம்!

விவசாயிகளுக்கு அனைத்து ஆலோசனைகளும் இனி நவீன முறையில் உடனுக்குடன் தெரிவிக்கப்படும் என வேளாண்மைத் துறை துணை இயக்குநர் (மாநில திட்டம்) கி. வெங்கடேசன் தெரிவித்தார்.

தருமபுரியை அடுத்த நார்த்தம்பட்டியில் திங்கள்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவில் அவர் பேசியது:

கிராமப்புறத்தில் உள்ள குடிசை வீடுகளிலும் சமையலறை நவீனமயமாகிவிட்டது. கிரைண்டர், மிக்ஸி, எரிவாயு அடுப்பு வந்துவிட்டது. ஆனால், வேளாண் சாகுபடியில் மட்டும் நவீன தொழில்நுட்பங்களுக்கு மாற விவசாயிகள் தயங்குகின்றனர். தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றுவதற்கு முன்பாக நவீனமையம் குறித்த அனைத்து தகவல்களையும் விரைந்து வழங்குவதற்காக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஊராட்சி தோறும் கணினி தகவல்: முதல் கட்டமாக, மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கணினி மூலம் தகவல் தெரிவிக்கப்படும். அந்தந்த ஊராட்சியில் உள்ள மண் வளம், என்ன பயிர் சிறந்தது, எந்த பருவத்துக்கு எப்படி சாகுபடி உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் குறுந்தகட்டில் பதிவு செய்து அந்தந்த ஊராட்சி கணினியில் பதிவிறக்கம் செய்யப்படும். தினமும் மாலை நேரத்தில் ஒரு மணி நேரம் இந்தத் தகவல்களை விவசாயிகள் கேட்கும் வகையில் காணொளியில் திரையிடப்படும். இதற்காக, அனைத்து ஊராட்சிகளிலும் தகவல்கள் பதிவிறக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கு அடுத்தபடியாக விவசாயிகள் பயன்படுத்தும் அலைபேசியில் குறுந்தகவல் மூலமும் ஆலோசனைகள் தெரிவிக்கப்படும். ஒவ்வொரு வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்திலும் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு இந்தக் குறுந்தகவல்களை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மேலும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் உழவர் அடையாள அட்டையை வைத்திருக்கும் நபர்களது விவரங்கள் அனைத்தும் கணினியில் பதிவு செய்து, அந்தந்த விவசாயி ஒவ்வொரு பருவத்துக்கும் செய்ய வேண்டியவை தொடர்பான ஆலோசனைகளும் வேளாண்மைத் துறையை தாமே முன்வந்து குறிப்பிட்ட காலத்தில் தகவல் தெரிவிக்கும்.

இதுபோன்ற நவீனமுறைகளை வேளாண்மைத் துறை பயன்படுத்துவதைப் போல விவசாயிகளும் நவீன தொழில்நுட்பங்களுக்கு மாற வேண்டும் என்றார் அவர்.

விதைச்சான்று உதவி இயக்குநர் வெ. கிருஷ்ணன், வேளாண்மை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியை இந்துமதி, வேளாண்மை அலுவலர் மணிராஜன், உதவி அலுவலர் சேகரன் ஆகியோர் அரசின் திட்டங்கள் குறித்து விளக்கிப் பேசினர். இவை தவிர, கால்நடைப் பராமரிப்பு, மீன்வளம், பட்டு வளர்ச்சி, தோட்டக்கலைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை உள்ளிட்ட வேளாண் சார்புடைய அனைத்து துறை அலுவலர்களும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தனர். இதில், நூற்றுக்கணக்கான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## நவீன வேளாண் கருவிகளைப் பயன்படுத்த ஆட்சியர் அறிவுரை

விவசாயத்தில் ஆள் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் நவீன வேளாண் கருவிகளைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் கேட்டுக் கொண்டார்.

காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், புரசடிஉடைப்பு, பால்குளம் வருவாய் கிராமங்களில் நடைபெற்று வரும் உழவர் பெருவிழா நிகழ்ச்சியை, திங்கள்கிழமை ஆட்சியர் திடீர் ஆய்வு செய்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகளிடம் வேளாண்மை குறித்த கருத்துக்களை கேட்டறிந்த பின்னர் அவர் பேசியது:

வேளாண்மை பொறியியல் துறை மூலம் நவீன வகை கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. விவசாயப் பணிக்கு ஆள் பற்றாக்குறை உள்ளதால் முழுமையாக விவசாயப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை என்ற காரணத்தைக் கூறாமல் துறை மூலம் மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தின் கீழ் வேளாண் கருவிகளைப் பெற்று உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும்.

இப்பகுதியில் செயல்படும் காளான் வளர்ப்பு நிலையம் ஏற்றுமதி செய்யும் அளவிற்கு உற்பத்தியை அதிகரித்து நல்ல லாபத்தை பயனாளி ஒருவர் பெற்று வருகிறார்.

அதேபோல் ஒவ்வொருவரும் விவசாயத்தில் புதிய வகை உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய முன்வர வேண்டும். அப்போது சிறுதொழில் மையங்களின் எண்ணிக்கை கூடுவதுடன் அதிக நபர்களுக்கு வேலைவாய்ப்புகளும் கிடைக்கும் என்றார்.

நிகழ்ச்சியில் காளையார்கோவில் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சாக்குளின், வேளாண் உதவி இயக்குநர் ஜெயசீலன் டேவிட், உதவி அலுவலர் முத்துமணி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் காளீஸ்வரி (பால்குளம் ஊராட்சி), கண்ணகி செல்லையா (புரசடிஉடைப்பு ஊராட்சி), நீர் பாசன சங்கத் தலைவர் அண்ணாத்துரை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பெரியகுளம் பகுதியில் சூறாவளிக் காற்று: ஏராளமான வாழை மரங்கள் சேதம்

பெரியகுளம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை அடித்த சூறாவளிக் காற்றால் வாழை மரங்கள் சாய்ந்து சேதமடைந்தன. இதன் மதிப்பு ரூ பல லட்சம் ஆகும்.

பெரியகுளம் பகுதியில் குள்ளப்புரம்,ரெங்கநாதபுரம், ஏ,வாடிப்பட்டி, மருகால்பட்டி ஆகிய கிராமங்களில் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. இப் பகுதியில் ஞயிற்றுக்கிழமை மாலை பலத்த சூறாவளிக் காற்று அடித்ததால் ஆயிரக்கணக்கான மரங்கள் சாய்ந்து சேதமடைந்தது. மேலும் இவ் வாழை மரங்கள் தற்பொழுது

குலை தள்ளிய நிலையில் இருந்ததால் சேத மதிப்பு ரூ பல லட்சம் ஆகும். வாழை சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ 80 ஆயிரம் வரை செலவு ஆகிறது.

எனவே சேதமடைந்த வாழை விவசாயிகளுக்கு அரசு நிவாரணத்தொகை வழங்கும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## ஒடைப்பட்டியில் உழவர் பெருவிழா

ஒட்டன்சத்திரம், ஒடைப்பட்டி ஊராட்சியில் உழவர் பெருவிழா நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், ஒடைப்பட்டி ஊராட்சியில் உழவர் பெருவிழா நடைபெற்றது. விழாவுக்கு வேளாண்மை உதவி இயக்குனர் செ. அமலா தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் கே.சி. பழனிச்சாமி முன்னிலை வகித்தார்.விழாவில் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் கே.பி. நல்லசாமி கலந்து கொண்டு பேசினார்.

இந்த விழாவில் வேளாண்மை துறையின் மூலம் கருத்துக்காட்சி, செயல் விளக்கங்கள், உயிர் உரங்கள் விதை நேர்த்தியும், தோட்டக்கலைத் துறையின் மூலம் குழித்தட்டு முறையில் தக்காளி

நாற்றங்கால் தயார் செய்தல், வேளாண்மை விற்பனை துறையினரால் தரம் பிரித்த கைத்தெளிப்பான் செயல் விளக்கம் போன்றவை செய்து காண்பிக்கப்பட்டது. விழாவில் ஒடைப்பட்டி ஊராட்சிமன்றத் தலைவர் பி. பொன்னுத்தாய் பழனிச்சாமி, ஒன்றியக்குழு உறுப்பினர் ராஜலட்சுமி அர்ஜுனன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் கே. செல்வராஜ் நன்றி கூறினார்.

## மண் பரிசோதனை அவசியம்

தற்போதைய சூழ்நிலையில் நிலத்தின் மண்ணைப் பரிசோதனை செய்து அதன் தன்மைக்கேற்ப விவசாயப் பயிர்களைப் பயிரிட வேண்டும் என நெய்வேலி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.பி.எஸ்.சிவசுப்ரமணியன் கேட்டுக் கொண்டார்.

பண்ருட்டி ஒன்றியம், திருவாமூர் ஊராட்சியில் தமிழக அரசின் விலையில்லாப் பொருள்களான மிக்ஸி, கிடைண்டர், மின்விசிறி வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

விழாவில் கலந்து கொண்ட அவர், திருவாமூர் ஊராட்சியைச் சேர்ந்த 1,122 பயனாளிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா பொருள்களை வழங்கி பேசியது:

நமது உடலைப் பரிசோதனை செய்துக் கொள்வது போல் விவசாய நிலத்தின் மண்ணையும் பரிசோதனை செய்து, வேளாண் துறை அலுவலர்களின் ஆலோசனைப்படி விவசாயம் செய்தால்தான் பலன் பெற முடியும்.

அரசு வழங்கும் திட்டத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தண்ணீரை மிச்சப்படுத்த வேண்டும். நிலத்தில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க வேண்டும் என பேசினார்.

விழாவில், பண்ருட்டி ஒன்றியக் குழுத் தலைவர் மாலதி கமலக்கண்ணன், மாவட்ட கவுன்சிலர்கள் கே.தேவநாதன், மாலாபெருமாள், வட்டார அட்மா குழுத் தலைவர் சிறுவத்தூர் இராஜேந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர் கெப்சல்யா பட்டாபி, துணைத் தலைவர் ஜெயக்கொடி பழனிசாமி, ஊராட்சி கழக செயலர் எச்.பி.ரவிச்சந்திரன், ஊராட்சி செயலர் அ.அம்சவேல், வட்டாட்சியர் பத்மாவதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

23.04.2013 A.M

## மார்க்கெட் கமிட்டிகளில் விலை பட்டியல்: டிஜிட்டல் டிஸ்பிளே அறிமுகம்

விழுப்புரம் : மார்க்கெட் கமிட்டிகளில் புதியதாக நிறுவப்பட்டுள்ள "டிஜிட்டல் விலைப் பட்டியல் ஒளிபரப்பு ' விவசாயிகளிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில், விவசாயிகள் நெல், பருத்தி, வேர்கடலை, தானியங்கள் உள்ளிட்ட தங்கள் விளை பொருட்களை மார்க்கெட் கமிட்டிகளுக்கு கொண்டு வந்து அதிகளவில் விற்பனை செய்து வருகின்றனர்.

கமிட்டிகளில் விவசாயிகள் கொண்டு வரும் விளை பொருட்கள், லாட் அமைத்து வைக்கப்படும். வியாபாரிகள் விலை நிர்ணயம் செய்த பின், அதிக பட்ச விலைக்கு விளை பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது.

இதற்காக விவசாயிகள் அதிகாலையில் தங்கள் விளை பொருட்களை லாட் அமைத்து வைத்துவிட்டு, விலை அறிவிப்பிற்காக காத்திருப்பார்கள். முற்பகல் 11 மணிக்கு மேல், லாட் வாரியாக விவசாயிகளின் விளை பொருட்களுக்கு விலை பட்டியல் ஒட்டப்படும்.

சுவற்றில் பேப்பரில் ஒட்டப்படும், இந்த விலை பட்டியலை விவசாயிகள் முண்டிஅடித்துக்கொண்டு தங்களின் விளை பொருட்களின் விலையை தெரிந்துகொள்வர். இதனால் விவசாயிகள் கூட்டநெரிசலில் சிக்கித் தவித்து வந்தனர்.

நீண்ட கால இந்த பழைய நடைமுறைக்கு, வேளாண் விற்பனைத் துறை முற்றுப்புள்ளி வைத்துள்ளது. புதிய தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப டிஜிட்டல் முறையில் கம்ப்யூட்டர் மூலம் இயங்கும் டிஸ்பிளே விலை பட்டியல் போர்டை தற்போது நிறுவியுள்ளனர்.

இந்த டிஸ்பிளேவில் விவசாய பொருட்களின் விலை பட்டியலை தெரிந்துகொள்ளாம். வரிசைப்படி விவசாயிகளின் லாட் எண், விளைபொருளின் அதிக பட்ச விலை, குறைந்த பட்ச விலை, ஏலம் எடுத்த வியாபாரியின் பெயர், திரையில் சுழற்சி முறையில் டிஸ்பிளே ஆகிறது.

இது மட்டுமின்றி, தினசரி மாலை நேரத்தில், வெளி மார்க்கெட் கமிட்டிகளில் விளை பொருட்களின் இன்றைய விலையும் ரகம் வாரியாக டிஸ்பிளே ஆகிறது. இதனால் விவசாயிகள்

வெளி மார்க்கெட் விலையையும் தெரிந்துகொள்ள முடிகிறது.
திறந்த வெளியில் இந்த டிஸ்பிளே தொடர்ந்து இயங்குவதால், நெருக்கடியின்றி விவசாயிகள் தங்கள் விளை பொருட்களின் விலையை எளிதாக தெரிந்து கொள்ள முடிகிறது.
இந்த டிஸ்பிளே தகவல் உதவிகரமாக உள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## கால்நடை துறை கண்காட்சி நிறைவு விழா

விழுப்புரம் : விழுப்புரத்தில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழகம் சார்பில் மண்டல கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு தொழில்நுட்ப கண்காட்சி நிறைவு விழா நடந்தது.
விழுப்புரம் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் கடந்த 20ம் தேதி துவங்கிய கண்காட்சியில் மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, தீவனப் புல் வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு அரசு திட் டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கப்பட்டது.
கண்காட்சியின் நிறைவு விழா நேற்று மாலை
நடந்தது.
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழக துணை வேந்தர் பிரபாகரன் தலைமை தாங்கினார். தொலை நிலை கல்வி இயக்கக இயக்குனர் தியாகராஜன் வரவேற்றார்.
நகராட்சி தலைவர் பாஸ்கரன், ஆவின் பொதுமேலாளர் சுந்தரேசன், விழுப்புரம் மண்டல கால்நடைப் பராமரிப்பு துறை இணை இயக்குனர் அழகரசன், கடலூர் மண்டல இணை இயக்குனர்
மதிவாணன், திருவண்ணாமலை உதவி இயக்குனர் சுகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.
கலெக்டர் சம்பத் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, கண்காட்சியை ஏற்பாடு செய்த துறை தலைவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கினார்.
விழுப்புரம் கால்நடை பராமரிப்புதுறை மண்டல இயக்குனர் சுந்தரராஜன், உதவி இயக்குனர் ராஜா சிதம்பரம் மற்றும் பேராசிரியர்கள், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். கால்நடை உற்பத்தி கல்வி மைய இயக்குனர் பாபு நன்றி கூறினார்.

## தமிழகம், கேரளாவில் முட்டைவிலை 310 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 310 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இரு தினங்களில், முட்டை விலை, 20 காசு ஏற்றம் கண்டிருப்பது, கோழிப்பண்ணையாளர் மத்தியில், மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர்.

அதையடுத்து, 295 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 15 காசு உயர்ந்து, 310 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.இரு தினங்களில், முட்டை, 20 காசு ஏற்றம் கண்டிருப்பது, கோழிப்பண்ணையாளர் மத்தியில், மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 295, பெங்களூரு, 265, மைசூரு, 265, ஹைதராபாத், 242, மும்பை, 270, விஜயவாடா, 252, கோல்கத்தா, 305, பார்வாலா, 253, டில்லி, 264.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, கிலோ, 55 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, கிலோ, 67 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## 248 பருத்தி மூட்டைகள் ரூ.3.50 லட்சத்துக்கு ஏலம்

ராசிபுரம்: ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கம் சார்பில், வாரந்தோறும் திங்கள் கிழமை, பருத்தி ஏலம், கவுண்டம்பாளையம் குடோனில் நடக்கிறது. ஏராளமான வியாபாரிகள் கலந்து கொண்டு, பருத்திகளை, ஏலத்தில் எடுத்து விற்பனை செய்து வருகின்றனர்.அதன்படி, நேற்று நடந்த ஏலத்தில், பட்டணம், முத்துகாளிப்பட்டி, கைலாசம்பாளையம், வேலம்பாளையம், கதிராநல்லூர், குருசாமிபாளையம், சீராப்பள்ளி, தண்ணீர்பந்தல்காடு, ஜேடர்பாளையம், மணிவிழுந்தான்காலனி போன்ற பல்வேறு பகுதிகளில் இருந்து, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.அதில், ஆர்.சி.ஹெச்., பருத்தி மூட்டை, 161, டி.சி.ஹெச்., 87 என மொத்தம், 248 மூட்டைகள் ஏலத்துக்கு கொண்டுவரப்பட்டது. நேற்று நடந்த ஏலத்தில், டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,910க்கும், குறைந்த பட்சம், 4,229 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதேபோல், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,719க்கும், குறைந்த பட்சம், 4,410 ரூபாய்க்கும் விற்பனையானது. 248 பருத்தி மூட்டைகள், 3.50 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

## சூறாவளி காற்றில் வாழை மரங்கள் சேதம் கடும் நஷ்டத்தில் வாழை விவசாயிகள்

சேலம்: சேலம் அருகே உள்ள கணபதிபாளையத்தில் வீசிய, சூறாவளி காற்றால், நூற்றுக்கணக்கான வாழை மரங்கள் முறிந்து விழுந்தன. வாழை தார்கள் முதிர்ச்சியடையாத நிலையிலேயே கிடப்பதால், விவசாயிகள் நஷ்டமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.சேலம், இரும்பாலை அருகே கணபதிபாளையம் பகுதியை சேர்ந்த விவசாயி ஜெயராமன், இரண்டு ஏக்கரில் வாழை பயிரிட்டுள்ளார். வீசிய சூறாவளி காற்று, தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால்,

இவரது தோட்டத்தில் நூற்றுக்கணக்கான வாழை மரங்கள் முறிந்து கிடக்கின்றன. தவிர, சுற்றுப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள வாழை மரங்களும் தண்ணீரின்றி காய்ந்து கிடக்கிறது.கணபதிபாளையம் விவசாயி ஜெயராமன் கூறியதாவது:பல ஆண்டுகளாக கரும்பு பயிரிட்டு வந்தேன். மாற்று பயிர் சாகுபடிக்காக, இரண்டு ஏக்கரில், 1,800 கதளி ரக வாழைகள் பயிரிட்டேன். ஒரு ஏக்கருக்கு, 75 ஆயிரம் ரூபாய் செலவு செய்துள்ளேன். மூன்று நாளைக்கு ஒரு முறை வாழை மரங்களுக்கு முறைப்படி தண்ணீர் விடப்பட்டது.ஆரம்ப காலத்தில் சரியான முறையில் வளர்ந்து வந்த வாழை மரங்கள், எட்டாவது மாதத்தில் தண்ணீரின்றி காயந்தன. போர்வெல் மற்றும் கிணற்றில் தற்போது, தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலும், கடும் வறட்சி நீடிப்பதாலும், வாழை மரங்கள் காய்ந்து கிடக்கின்றன.இந்நிலையில், நான்கு நாட்களுக்கு முன், வீசிய சூறாவளி காற்றில், 850க்கும் மேற்பட்ட வாழை மரங்கள் முறிந்து சாய்ந்தன. வாழை குலைகள் முதிர்ச்சியடையாத நிலையில், தார்கள் காய்ந்துள்ளன. முறிந்து விழுந்த, 850க்கும் மேற்பட்ட வாழை மரங்களில் இருந்த தார்கள் உரிய வளர்ச்சி பெறாததால், கால்நடைகளுக்கு தீவனமாக கொடுக்கப்படுகிறது.மற்ற பகுதியில் உள்ள வாழைகள் வளர்ச்சியடையாத நிலையில் காணப்படுகிறது. இது தொடர்பாக வேளாண் அலுவலருக்கும் உரிய தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## ஆவுடையார்பட்டில் உழவர் பெருவிழா

விக்கிரவாண்டி : விக்கிரவாண்டி ஒன்றியம் ஆவுடையார்பட்டு கிராமத்தில் உழவர் பெருவிழா நடந்தது.
ஒன்றிய சேர்மன்
சுமதி நாகப்பன் தலைமை தாங்கினார். அட்மா திட்ட தலைவர் குமாரசாமி முன்னிலை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் பரமசிவம் வரவேற்றார். மாவட்ட சேர்மன் அலமேலு வேலு விழாவை துவக்கி வைத்தார்.
பின்னர் விவசாயிகளுக்கு அறுசுவை உணவு பரிமாறப்பட்டது. வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்து துணை இயக்குனர்கள் ராஜேந்திரன், அன்பழகன், ராஜசேகரன், சண்முகம், அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளர் நமச்சிவாயம் ஆகியோர் விளக்கிப் பேசினர்.
ஊராட்சி மன்ற தலைவர் நீதி கோபிநாத், அ.தி.மு.க., ஒன்றிய விவசாய அணி இணை செயலாளர் நாகப்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர். துணை வேளாண் அலுவலர் சுப்ரமணியன் நன்றி கூறினார்.

## "தாட்கோ' மூலம் 1,923 பயனாளிகளுக்கு கடனுதவி

திருவள்ளூர் : "தாட்கோ' மூலம், மாவட்டத்தில், 1,923 பயனாளிகளுக்கு, 6.31 கோடி ரூபாய் மானியத்துடன், 18.24 கோடி ரூபாய் மதிப்பிலான, கடனுதவிகள் வழங்கப்பட்டன. திருவள்ளூர் மாவட்டத்தில், "தாட்கோ' மூலம் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா, ஆட்சியர் வீர ராகவராவ் தலைமையில் நடைபெற்றது. தாட்கோ மேலாண் இயக்குனர் சுகந்தி திட்ட விளக்க உரையாற்றினார். மேலாளர் துளசிதரன் வரவேற்றார். நிகழ்ச்சியில், பால்வளத் துறை அமைச்சர் மூர்த்தி, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் ரமணா ஆகியோர், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். தாட்கோ மூலம் நிலம் வாங்கும் திட்டத்தின் கீழ், ஒரு பயனாளிக்கும், தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 278 பேருக்கும், இளைஞர்கள் சுய தொழில் திட்டத்தின் கீழ், 83 பேருக்கும், மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு சுழல் நிதி, 297 பேர் உள்ளிட்ட, 1,923 பேருக்கு, ரூ.18.24 கோடி மதிப்பில், ரூ.6.31 கோடி மானியத்தில் கடனுதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில், திருவள்ளூர் தொகுதி எம்.பி., வேணுகோபால், மாவட்ட ஊராட்சி தலைவர் ரவிச்சந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

## கும்மிடிப்பூண்டியில் மூன்று மணி நேரம் மழை

கும்மிடிப்பூண்டி : கும்மிடிப்பூண்டி பகுதியில், நேற்று மதியம், இடியுடன் பலத்த மழை பெய்தது. இடி தாக்கி இரு பசுக்கள் பலியாகின. கும்மிடிப்பூண்டி பகுதியில், சில தினங்களாக மாலை நேரத்தில் வானம் இருட்டிக் கொண்டு, லேசான சாரல் மழை பெய்து வந்தது. இந்த நிலையில், நேற்று பிற்பகலில் வானம் இருட்டிக் கொண்டு, மூன்று மணி நேரம் பலத்த இடியுடன் தொடர் மழை பெய்தது. கும்மிடிப்பூண்டி பஜார் பகுதியில், கழிவுநீருடன் மழைநீர் கலந்து சாலையோரம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. கும்மிடிப்பூண்டி அடுத்த, பட்டுபள்ளி கிராமத்தைச் சேர்ந்த, சர்க்கரை ரெட்டி மகன் சம்பத், 45. இவர் தன் இரு பசுக்களை, வீட்டின் அருகே உள்ள பூங்க மரத்தில் கட்டி வைத்திருந்தார். இடி தாக்கியதில் அந்த இரு பசுக்களும் கருகி இறந்தன. அதில் ஒரு பசு மாடு, தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டதாகும்.

## நெல் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி: சன்ன ரக நெல் மற்றும் வைக்கோல் விலை, இரட்டிப்பானதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணை பாசன பகுதிகளான திம்மாபுரம், மலையாண்டஅள்ளி, பையூர், கால்வேஅள்ளி, அவதானப்பட்டி, பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், சின்னமுத்தூர், காவேரிப்பட்டணம், தேர்பட்டி, சவுளூர், பென்னேஸ்வரமடம், நெடுங்கல்,

கொட்டாவூர் ஆகிய பகுதிகளில், எட்டு ஆயிரம் ஏக்கரில், இரண்டாம் போக நெல் சாகுபடி செய்யப்பட்டு, தற்போது அறுவடை செய்யும் பணி நடந்து வருகிறது.பொதுவாக, இரண்டாம் போக நெல் சாகுபடியின் போது, சன்னரக நெல்லை மட்டுமே விவசாயிகள் சாகுபடி செய்வார்கள். கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில் இந்த ஆண்டு அம்மன், ரஜினி, தனலட்சுமி, ஸ்ரீலட்சுமி, தானியலட்சுமி போன்ற ஆந்திரா வகை சன்ன ரக நெல்லை விவசாயிகள் சாகுபடி செய்தனர். தற்போது, இரண்டாம் போக நெல் சாகுபடி அறுவடை நடந்து வரும் நிலையில், நெல்லை வாங்க, ஈரோடு மாவட்டத்தில் இருந்து வியாபாரிகள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வந்துள்ளனர்.விவசாயிகள் நெல் அறுவடை செய்யும் இடத்திற்கு செல்லும் வியாபாரிகள் நெல் அறுவடை செய்யும் இடத்திலேயே, ஈர நெல் விலைக்கு வாங்குகின்றனர். 76 கிலோ கொண்ட ஒரு மூட்டை நெல், 1,200 ரூபாயுக்கு வியாபாரிகள் வாங்குகின்றனர்.கடந்த ஆண்டு கே.ஆர்.பி. அணை பாசன பகுதியில் நெல் விளைச்சல் அதிகம் இருந்த நிலையில், 76 கிலோ கொண்ட ஒரு மூட்டை நெல், 580 ரூபாய்க்கு மட்டுமே வியாபாரிகள் வாங்கினர். இதனால், விவசாயிகளுக்கு குறைந்த அளவே லாபம் கிடைத்தது. இந்த ஆண்டு நெல், விலை, இரட்டிப்பாகியுள்ளதால் நெல் சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.மேலும், வைக்கோல் விலையும் கடந்த ஆண்டை விட, இந்த ஆண்டு அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு, ஒரு ஏக்கர் நெல் சாகுபடியில் கிடைத்த வைக்கோல், 10 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, 20 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது.

## உணவு உற்பத்தி அதிகரிக்கணுமா? வேளாண் விஞ்ஞானி யோசனை

புதுக்கோட்டை: ""உணவு உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்றால் இளைஞர்களுக்கு விவசாயம் குறித்த நவீன தொழில்நுட்ப பயிற்சி அளிக்கவேண்டியது அவசியமாகிறது," என வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் விருப்பம் தெரிவித்தார்.புதுக்கோட்டையில் இதுகுறித்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது:தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதும் விவசாயத்தை மேம்படுத்தி உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்டு வருகிறது. இன்றைய சூழ்நிலையில் விவசாயப் பணிகளுக்கு ஆள் கிடைப்பது அரிதாக உள்ளது.விவசாய குடும்பத்தை எடுத்துக்கொண்டால் அப்பா விவசாயம் செய்துவருவார், மகன் அல்லது மகள் உயர்கல்வி படிப்பவராகவோ, பட்டதாரியாகவோ இருப்பார்கள். அப்பாவை விட அதிகம் சம்பாதிக்கவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு உருவாவது இயல்பு.நமது நாட்டில், 30 வயதுக்குட்பட்ட, 60 கோடி இளைஞர்கள் உள்ளனர். இவர்களை விவசாயத்துக்கு திருப்ப வேண்டும் என்றால் விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து பயிற்சி அளிக்கவேண்டியது அவசியமாகிறது. இதன்மூலம் விவசாயம் மேம்படவும், உணவு உற்பத்தி அதிகரிக்கவும் வாய்ப்பாக அமையும்.இவை தவிர தஞ்சை, திண்டுக்கல் மாவட்டங்களில் துவக்கப்பட்டுள்ள பண்ணை பள்ளிகளைப் போன்று தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதும்

பண்ணை பள்ளிகள் துவக்க வேண்டும்.விவசாயம் குறித்து அனுபவமிக்க விவசாயிகளை வைத்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதன் மூலமாகவும் விவசாயத்தை மேம்படுத்த முடியும். புதுக்கோட்டை மாவட்டத்தில் இடையப்பட்டி பஞ்சாயத்து பயறுவகை பஞ்சாயத்தாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு உளுந்து, தட்டை பயறு, துவரை போன்ற பயறுவகை பயிர்கள் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது.இதுபோன்று ஒவ்வொரு கிராமங்களிலும் கிடைக்கின்ற அல்லது இருக்கின்ற இயற்கை வளங்களை பயன்படுத்தி இதுபோன்ற பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம் உணவு உற்பத்தியை அதிகரிக்கலாம்.பருவநிலை மாற்றத்துக்கு ஏற்றாற்போல் விவசாயம் அமைய வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக பாதுகாப்பான உணவு, தரமான உணவு, லாபகரமான உணவு வகைகள் உற்பத்தி செய்வதே குறிக்கோளாக இருக்கவேண்டும்.இதற்காக விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும். விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றுவதற்கான வழிவகைகள் குறித்து அரசுக்கு அறிவுரைகள் வழங்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.பேட்டியின் போது, கலெக்டர் (பொறுப்பு) நாகராசன், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன செயல் இயக்குனர் அஜய் பரிடா, திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜ்குமார் உட்பட பலர் உடனிருந்தனர்.

## கெஞ்சனூரில் உழவர் பெருவிழா

ஈரோடு: சத்தியமங்கலம், கெஞ்சனூர் கிராமத்தில் உழவர் பெருவிழா நடந்தது.வேளாண் துணை இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். இக்கரைநெகமம் பஞ்சாயத்து தலைவர் வேலுமணி மாரிச்சாமி மற்றும் வேளாண் உதவி இயக்குனர் ரங்கநாயகி முன்னிலை வகித்தனர்.வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளை சேர்ந்த அதிகாரிகள், விவசாயிகளுக்கு, பல்வேறு ஆலோசனைகள் வழங்கினர்.வேளாண் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி ஹேமலதா, பண்ணாரியம்மன் சர்க்கரை ஆலை துணை பொது மேலாளர் ஜெயசந்திரன், வேளாண் அலுவலர் சிவப்பிரகாஷ், கால்நடை டாக்டர் திருவேங்கடம் உட்பட பலர் பங்கேற்றனர். மாக்கிணாங்கோம்பை, கோட்டுவீராம்பாளையம், சதுமுகை, சத்தியமங்கலம், கொமாரபாளையம், ராஜன்நகர், அரசூர், ரங்கசமுத்திரம், பட்டவர்த்திஅய்யம்பாளையம், கோணமூலை, கே.என்.பாளையம், மலையடிப்புதூர், ஆலத்துக்கோம்பை உட்பட பல கிராமங்களிலும் வரும் நாட்களில் உழவர் பெருவிழா நடக்க உள்ளது.

## மஞ்சள் விவசாயிகளுக்கு பொருளீட்டு கடன் வழங்கல்

ஈரோடு: ஈரோடு பள்ளிபாளையம் கார்பரேஷன் வங்கியில், மஞ்சள் விவசாயிகளுக்கான பொருளீட்டு கடன் வழங்கும் விழா நடந்தது.ஈரோடு எம்.பி., கணேசமூர்த்தி தலைமை வகித்தார். கார்பரேஷன் வங்கி மேலாளர் நாகராஜன், ஏழு விவசாயிகளுக்கு, 35 லட்சம் ரூபாய் பொருளீட்டு

கடன் வழங்கினார். ஈஸ்வரமூர்த்தி வரவேற்றார்.இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கத்தலைவர் தெய்வசிகாமணி பேசியதாவது:மஞ்சள் மூலம், பொருளீட்டுக்கடனாக கார்பரேஷன் வங்கி, 10.25 சதவீத வட்டி வசூலிக்கிறது. இதன் மூலம் விவசாயிகளின் இருப்பு வைக்கும் சக்தி அதிகரிக்கும். தமிழகத்தில் ஈரோடு, மகராஷ்டிராவில் சாங்லி,ஆந்திராவில் நிஜாமாபாத், கடப்பா போன்ற பகுதி விவசாயிகளுக்கு, கார்பரேஷன் வங்கி மூலம் பொருளீட்டுக்கடனை இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் பெற்றுத்தருகிறது.வரும் மே மாதத்துக்குள், 2,500 விவசாயிகளுக்கு பொருளீட்டுக்கடன் பெற்றுத்தர இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது, என்றார். தமிழ்நாடு மஞ்சள் விவசாயிகள் சங்கத்தலைவர் காசியண்ணன், செயலாளர் நஞ்சப்பன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## ரூ.7 லட்சம் மதிப்பில் நிதியுதவி உழவர் பெருவிழாவில் வழங்கல்

கோபிசெட்டிபாளையம்: நம்பியூரில் நடந்த உழவர் பெருவிழாவில், 52 விவசாயிகளுக்கு, 7.25 லட்சம் ரூபாய் மதிப்பிலான விவசாய இடுபொருட்களை முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் வழங்கினார்.நம்பியூர் வேளாண்மை துறை சார்பில் உழவர் பெருவிழா நடந்தது. விவசாய இடு பொருட்களை வழங்கி எம்.எல்.ஏ., செங்கோட்டையன் பேசியதாவது:நம்பியூர் பகுதி மானாவாரி பகுதியாகும். மழையை நம்பி உள்ள விவசாயிகள், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளை காப்பாற்ற தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நம்பியூர் பகுதியில் சாலை வசதிகள் மேற்படுத்தப்பட்டுள்ளன. உழவர் பெருவிழாவை விவசாயிகள் பயன்படுத்தி நன்மை அடைய வேண்டும், என்றார்.தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், ஒரு லட்சத்து, 94 ஆயிரத்து, 476 மதிப்பிலான பவர் டில்லர், பைப்லைன் அமைக்க, ஒரு லட்சத்து, 65 ஆயிரம் ரூபாய் உள்பட, 52 விவசாயிகளுக்கு, 7.25 லட்சம் ரூபாயில் இடுபொருட்கள் வழங்கப்பட்டது.உழவர் பெருவிழாவை முன்னிட்டு மஞ்சள் சாகுபடி, வாழை சாகுபடி குறித்த வேளாண் பொருட்கள் கண்காட்சி வைக்கப்பட்டு இருந்தன.நம்பியூர் யூனியன் தலைவர் துளசிமணி, ஒன்றிய செயலாளர்கள் தம்பி சுப்பிரமணியம், சிறுவலூர் மனோகரன், மாணவரணி மாவட்ட செயலாளர் பிரினியோ கணேஷ், துணை செயலாளர் அருள்ராமசந்திரா, வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, துணை இயக்குனர் மாரியப்பன், தோட்டக்கலை உதவி இயக்குனர் கணேசமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, வேளாண் அலுவலர் சுந்தரமூர்த்தி உட்பட பலர் பங்கேற்றனர்.

## தென்னை மரங்களை காக்கும் மட்டைகள் ஈரப்பதத்தை தக்க வைக்க புதிய முயற்சி

ஈரோடு: வறட்சி காரணமாக, ஈரோடு மாவட்டத்தில் உள்ள தென்னை விவசாயிகள், மரங்களை சுற்றிலும் மட்டைகளை போட்டு, விவசாயிகள் ஈரப்பதத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.ஈரோடு

மாவட்டம் விவசாயத்தை அடிப்படையாக கொண்டு வளர்ச்சியடைந்த மாவட்டமாகும். காலிங்கராயன், கீழ்பவானி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை உள்ளிட்ட பாசனங்களால் மொத்தம், 2.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெருகிறது. இம்மாவட்டத்தில், மஞ்சள், வாழை, கரும்பு, நெல் ஆகிய பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.ஈரோடு மாவட்டத்தில் சமீப ஆண்டுகளாக பருவமழை தவறியது. இதனால் நீர்நிலைகள் அனைத்தும் வற்றியதால், பாசன பூமியில் இருந்த கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணறுகள் முற்றிலும் வறண்டு, புதிதாக பாசனம் செய்வதில் விவசாயிகளுக்கு சிக்கல் ஏற்பட்டது. மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விவசாய பூமிகள், தண்ணீரின்றி வறண்டு, தரிசு நிலமாக காட்சியளிக்கிறது.இதுபோன்ற தருணங்களில், விவசாயிகளின் கைச்செலவுக்கு உதவிய தென்னை மரங்களும் முற்றிலும் வறண்டன. வறட்சி கொடுமையால், தென்னை மரங்களில் இருந்த மட்டைகள் கீழ்நோக்கி தொங்கி கிடக்கிறது. ஈரோடு மாவட்டத்தில் அவல்பூந்துறையில் துவங்கி, திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வரை, தென்னை மரங்களின் நிலைமை படுமோசமாக உள்ளது.பெருந்துறை, விஜயமங்கலம் உள்ளிட்ட பகுதியில் இதே நிலைதான் நீடிக்கிறது. ஒரு சில விவசாயிகள் இருக்கின்ற தென்னை மரங்களின் உயிர் காக்க ஆழ்குழாய் அமைக்கும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் மொத்தம், 20 லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. இம்மரங்களின் ஈரப்பதம் குறைந்து வருவதால், அதனை தக்க வைக்க பல வழிகளில் விவசாயிகள் முயன்று வருகின்றனர்.கீழ்பவானி பாசன சங்கத்தலைவர் நல்லசாமி கூறியதாவது:தமிழகம் முழுவதும் கடும் வறட்சி தலை தூக்கியுள்ளது. கீழ்பவானி வாய்க்காலில் உயிர் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் புதிதாக சாகுபடி செய்ய உதவாது. பயிர்களின் ஈரம் நனைப்புக்காக திறக்கப்பட்டுள்ளது. இருக்கின்ற தென்னை மரங்களும் காய்ந்து வருகின்றன. தென்னை மரத்தை சுற்றிலும், ஈரப்பதம் ஆவியாகாமல் இருக்க, தென்னை நார்கள் மற்றும் மட்டைகளை கொண்டு விவசாயிகள் நிலத்தின் ஈரப்பதத்தை காத்து வருகின்றனர், என்றார்.

## கால்நடை உற்பத்தி மேம்பாடு திட்டம் தமிழக அதிகாரிகள் பங்கேற்பு

திருநெல்வேலி:கால்நடை உற்பத்தி மேம்பாட்டு திட்டம் தொடர்பாக மலாவி நாட்டில் நடக்கும் கருத்தரங்கில் தமிழக அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், அமெரிக்கா மிக்சிகன் பல்கலைக் கழகம் மற்றும் தென் ஆப்பிரிக்கா மலாவி வேளாண்மை பல்கலைக் கழகம் ஆகியவை இணைந்து மலாவியில் கால்நடை பாதுகாப்பு திட்ட கருத்தரங்கு இன்றும் (23ம் தேதி), நாளையும் (24ம் தேதி) நடக்கிறது.இதில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக நெல்லை டீன் பிரதாபன், சென்னை கால்நடை மருத்துவ கல்லூரி டீன் அசோகன், உணவியல் துறை தலைவர் டாக்டர் பாலகிருஷ்ணன், மிக்சிகன் பல்கலைக் கழகம் டாக்டர் பிரவுன் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.மலாவி நாட்டில் கால்நடை உற்பத்தி, சிகிச்சை முறைகளை மேம்படுத்துவது தொடர்பாக உரிய கருத்துக்கள்

விவாதிக்கப்படுகிறது. மக்கள் தேவைகளை ஆராய்ந்து அதற்கு ஏற்ற வகையில் தொழில் நுட்ப திட்டங்களை வடிவமைப்பது குறித்தும், இ-லேர்னிங் முறையை அமல்படுத்துவது குறித்தும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.தொடர்ந்து மலாவி நாட்டை சேர்ந்த கால்நடை வல்லுனர்கள், ஆராய்ச்சியாளர்கள், மருத்துவர்கள் இந்தியாவுக்கு வந்து இங்கு உரிய பயிற்சிகளை மேற்கொள்ளவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

## விவசாயிகளுக்கு தகவல் தராமல் ஆத்தூரில் உழவர் பெருவிழா

செம்பட்டி:ஆத்தூர் ஒன்றியத்தில் விவசாயிகளுக்கு முறையான தகவல் தராமல் உழவர் பெருவிழாக்கள் நடத்தப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

ஏப்.14ல் துவங்கி, ஆத்தூர் வட்டாரத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் உழவர் பெருவிழா நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

பல துறைகளை சேர்ந்தவர்கள் பங்கேற்க வேண்டும். அவரவர் துறைகளில் செயல்படுத்தும் விவசாயம் மற்றும் அதனை சார்ந்த திட்டங்கள் குறித்து செயல்விளக்கம் மற்றும் கருத்தரங்கம் நடத்த வேண்டும் என்பது உத்தரவு.

தற்போது, கூடுதல் செலவினம் மற்றும் பணிச்சுமையால், வேளாண்மை துறையினர் விவசாயிகளுக்கு முறையாக தகவல் தராமல், பெயரளவிற்கு கண்துடைப்பாக உழவர் பெருவிழாக்களை நடத்தி வருகின்றனர்.

கிராமங்களில் மதிய உணவு தரப்படுவதாக மட்டும் கூறி அழைக்கின்றனர். தேவையான போட்டோ ஆதாரங்கள், பதிவேட்டில் கை யொப்பம் ஆகியவற்றை பெற்றதும் உணவளித்து அனுப்பி விடுகின்றனர். இதனால், உழவர் பெருவிழா நடத்துவதற்கான அடிப்படை நோக்கம் வலுவிழந்து போகிறது.

விழாக்களை முழுமையாக நடத்த வேண்டும் என்பது விவசாயிகள் எதிர்பார்ப்பு. மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ரவிச்சந்திரன் கூறுகையில்,""கிராமத்தில் முறையான தகவல் தரப்படுகிறது. ஒருசில விவசாயிகள் வேண்டுமென்றே தவறான புகார் தெரிவிக்கின்றனர்'' என்றார்.

## உயர்வு சந்தைக்கு வரத்து இன்றி விலை... பழநியில் தக்காளி விளைச்சல் குறைவு

பழநி:போதிய மழையில்லாததாலும், வெயிலின் தாக்கத்தால், தக்காளிவிளைச்சல் பாதிக்கபட்டுள்ளது. விலை உயர்ந்துள்ளது.

பழநி வட்டாரத்தில் கணக்கன்பட்டி, அமரப்பூண்டி, குதிரையாறு அணை, பாப்பம்பட்டி, கொழும்ரோடு உட்பட பல்வேறு பகுதிகளில், சொட்டுநீர்பாசனம், கிணற்றுப்பாசணம் மூலம், தக்காளி பயிரிட்டுள்ளனர். போதிய தண்ணீர் இல்லாததால், தாக்காளிச்செடிகள் காய்ந்து, வாடியுள்ளது.

பழங்கள் வெம்பி, காய்ப்புபிடிக்காமல் உதிர்ந்துள்ளது. இதன்காரணமாக, தக்காளி மார்க்கெட்டிற்கு வரத்து குறைந்துள்ளது.

பத்து நாட்களுக்கு முன், மார்க்கெட்டில் 15 கிலோ (ஒரு பெட்டி) ரூபாய் 80 முதல் 120 வரை விற்றது. வரத்து குறைவு காரணமாக மார்க்கெட்டில் 15 கிலோ பெட்டி ரூ.240 வரை, தரத்திற்கு ஏற்ப விற்கப்படுகிறது. உழவர் சந்தையில், தக்காளி, கிலோ ரூ.14 முதல் 24 வரை விற்கப்படுகிறது.

விலை அதிகரித்தாலும், வரத்து குறைவு காரணமாக, சந்தையில் காலை 7.30 மணிக்குள் தக்காளி விற்பனை முடிந்துவிடுகிறது. பிற கடைகளில் கிலோ ரூ.30 முதல் 35 வரை விற்கப்படுகிறது. வியாபாரி கோபால் கூறுகையில்,""பழநி தக்காளி மார்க்கெட்டில் வரத்து குறைவு காரணமாக, விலை உயர்ந்துள்ளது. பழங்கள் வெம்பியுள்ளன. தரம் இல்லை. ஒசூர், கர்நாடகா, ஆந்திரா தக்காளிகள் 25 கிலோ பெட்டி ரூ.450 வரை விற்கிறது,"என்றார்.

### உழவர் பெருவிழா

வேதாரண்யம்: வேதாரண்யம் அடுத்த தலைஞாயிறு பஞ்சாயத்து யூனியனை சேர்ந்த கொத்தங்குடியில் உழவர் பெருவிழா வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தலைமையில் நடந்தது. பஞ்சாயத்து தலைவர் மகாரவி முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் பிரதீப் வரவேற்றார். வேளாண்மை பொறியியல் துறை பொறியாளர் மோகன்தாஸ், துணை வேளாண்மை அலுவலர் பாரதி, தோட்டக்கலை அலுவலர் கார்த்திகேயன், வேளாண்மை உதவி அலுவலர் பழனிச்சாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### இயற்கை ரப்பர் உற்பத்தி 9.12 லட்சம் டன்னாக உயரும்

கோட்டயம்:நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி, சென்ற 2012-13ம் நிதியாண்டில், 9.12 லட்சம் டன்னாக அதிகரித்திருக்கும் என, தற்காலிக மதிப்பீட்டின் வாயிலாக தெரியவந்துள்ளது.இது, இதற்கு முந்தைய நிதியாண்டை விட, 0.9 சதவீதம் சற்று அதிகமாகும் என, ரப்பர் வாரியத்தின் தலைவர் ஷீலா தாமஸ் தெரிவித்தார்.

மதிப்பீடு:எனினும், சென்ற 2011-12ம் நிதியாண்டில், நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி, 4.8

சதவீதம் என்ற அளவில் சிறப்பாக அதிகரித்து காணப்பட்டது.இந்நிலையில், கடந்த 2012 ஏப்ரல் மற்றும் மே ஆகிய இருமாதங்களிலும், நடப்பாண்டு ஜனவரி முதல் மார்ச் வரையிலான மூன்று மாதங்களிலும், ரப்பர் உற்பத்திக்கு சாதகமற்ற சூழல் காணப்பட்டதால், இதன் உற்பத்தி குறைந்த அளவிலேயே இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.சென்ற 2012-13ம் நிதியாண்டில், ரப்பர் பயன்பாடு, 0.8 சதவீதம் உயர்ந்து, 9.71 லட்சம் டன்னாக அதிகரித்திருக்கும் என, கணக்கிடப் பட்டுள்ளது. கடந்த 2011-12ம் நிதியாண்டில், இந்த பயன்பாட்டு வளர்ச்சி, 1.8 சதவீதம் என்ற அளவில் இருந்தது.டயர் நிறுவனங்கள்:டயர் தயாரிப்பில் முக்கிய மூலப் பொருளாக இயற்கை ரப்பர் விளங்குகிறது. டயர் தயாரிப்பு நிறுவனங்களில், இதற்கான பயன்பாட்டு வளர்ச்சி, 0.01 சதவீதம் என்ற மிக குறைந்த அளவிற்கே இருக்கும் என, கணக்கிடப்பட்டுள்ளது. அதேசமயம், டயர் துறை சாராத இதர நிறுவனங்களில், இயற்கை ரப்பர் பயன்பாட்டு வளர்ச்சி, 2.3 சதவீதமாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது.சென்ற நிதியாண்டில், நாட்டின் ரப்பர் இறக்குமதி, 2,16,642 டன்னாகவும், ஏற்றுமதி, 30,353 டன்னாகவும் இருந்தது.மதிப்பீட்டு நிதியாண்டில், "இந்திய இயற்கை ரப்பர்' என்ற பிராண்டுடன் மேற்கொள்ளப்பட்ட ரப்பர் ஏற்றுமதி, 17,813 டன்னாக உள்ளது. ஒட்டு மொத்த ரப்பர் ஏற்றுமதியில், இதன் பங்களிப்பு, 59 சதவீதமாகும். பயன்பாடு:நடப்பு 2013-14ம் நிதியாண்டில், உள்நாட்டில், ரப்பர் உற்பத்தி, 9.60 லட்சம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம், இதன் பயன்பாடு, 10.20 லட்சம் டன்னாக இருக்கும் என, கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, நடப்பு நிதியாண்டில், ரப்பருக்கான பற்றாக்குறை, 60 ஆயிரம் டன் என்ற அளவில் இருக்கும் என, தெரிகிறது.இருப்பினும், நடப்பு நிதியாண்டில், உள்நாட்டில், இயற்கை ரப்பரை பொறுத்தமட்டில், தட்டுப்பாடு ஏற்படாது. ஏனெனில், ஏப்ரல் மாத நிலவரப்படி, நாட்டின் இயற்கை ரப்பர் கையிருப்பு, 2.66 லட்சம் டன்னாக உள்ளது. மேலும், டயர் தயாரிப்பு நிறுவனங்கள், முழு வரி விலக்கு அடிப்படையில், 1 லட்சம் டன்னிற்கும் அதிகமாக, இயற்கை ரப்பரை இறக்குமதி செய்து கொண்டுள்ளன என, ஷீலா தாமஸ் மேலும் கூறினார்.சென்ற 2012ம் ஆண்டில், உலக அளவில், இயற்கை ரப்பர் உற்பத்தி, 1.14 கோடி டன் என்ற அளவில் இருந்தது. அதேசமயம், இதன் பயன்பாடு, 1.09 கோடி டன் என்ற அளவில் இருந்தது.

வளர்ச்சி:இதையடுத்து, இயற்கை ரப்பர், உபரி அளவாக, 5 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.சென்ற ஆண்டில், சர்வதேச அளவில், இயற்கை ரப்பர் உற்பத்தி, 3.2 சதவீத அளவிற்கே வளர்ச்சி கண்டுள்ளது.அதேசமயம், சென்ற 2011ம் ஆண்டில், உலகளவில், இயற்கை ரப்பர் உற்பத்தி, 5.8 சதவீதம் என்ற அளவில் சிறப்பாக வளர்ச்சி கண்டிருந்தது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.04.2013 A.M**

---

## உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு மானியத்தொகை

பல்லடம்,: கோவை மாவட்டம் சுல்தான்பேட்டை வேளாண் விரிவாக்க மையம் சார்பில் உழவர் பெருவிழா இடையர்பாளையத்தில் நடைபெற்றது. விழாவிற்கு வேளாண் உதவி இயக்குனர் மனோகரன் தலைமை தாங்கினார். இடையர்பாளையம் ஊராட்சி மன்றத்தலைவர் பாலசுப்பிரமணியம் முன்னிலை வகித்தார். விழாவில் ஊராட்சி துணைத்தலைவர் ராதாமணி, உதவி விதை அலுவலர் ரங்கநாதன், வேளாண்மை உதவி அலுவலர் பாலமுருகன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

விழாவில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை உள்ளிட்ட இதர துறைகளில் வழங்கப்படும் மானியத்தை பயன்படுத்தி கொள்ளவேண்டும் என விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. விழாவில் தேசிய வளர்ச்சி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நுண்ணிய பாசன கருவிகள் 6 விவசாயிகளுக்கும், பட்டுவளர்ச்சி துறை மூலம் மல்பரி நடவு செய்ய 2 விவசாயிகளுக்கும் மானியத்தொகை வழங்கப்பட்டது.

மற்றும் தோட்டகலை மூலம் காய்கறி விதைகள் வழங்கப்பட்டது. கால்நடைத்தறை சார்பில் மானாவாரி நிலங்களில் தீவனப்பயிர் சாகுபடியை அதிகரிக்க மானியம் வழங்கப்பட்டது. விழா முடிவில் அனைத்து விவசாயிகளுக்கும் விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டது. மண் மாதிரி சேகரிக்கப்பட்டு படிவம் 1.பூர்த்தி செய்யப்பட்டது. முடிவில் வேளாண் உதவி அலுவலர் அசாருதீன் நன்றி கூறினார்.

## சங்ககிரியில் உழவர் பெருவிழா

சங்ககிரி, : சங்ககிரியில் வேளாண்மை துறை சார்பில் உழவர் பெருவிழா நடைபெற்றது. சேலம் மாவட்டம், சங்ககிரி அருகே உள்ள வடுகப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் சங்ககிரி வேளாண்மை துறை சார்பில் உழவர் பெருவிழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு வடுகப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் செல்வராஜ் தலைமை வகித்தார். சங்ககிரி வட்டார வேளாண்மை அலுவலர் ராஜகோபால் வரவேற்றார். சங்ககிரி வேளாண்மை உதவி

இயக்குநர் ராமலிங்கம், சங்ககிரி ஊராட்சி ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் சீரங்கன், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
விழாவில் சங்ககிரி சட்ட மன்ற உறுப்பினர் விஜயலட்சுமி பழனிச்சாமி சிறப்புரையாற்றி உழவர்களுக்கு இடுபொருட்கள் வழங்கினார். இவ்விழாவில் கால்நடைத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் சான்றளிப்புத் துறை, வேளாண் வணிகத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதில் விவசாய கண்காட்சியுடன், செயல் விளக்கங்களும் அளிக்கப்பட்டன.
முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் மோகனசுந்தரம் நன்றி கூறினார்.

## தாம்பரத்தில் திடீர் மழை

தாம்பரம், : சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. பகல் நேரத்தில் மக்கள் நடமாட அஞ்சுகின்றனர். இரவில் புழுக்கம் அதிகமாக இருப்பதால் தூக்கமின்றி மக்கள் தவிக்கின்றனர்.
இந்நிலையில் நேற்று காலை தாம்பரம், பெருங்களத்தூர், கிழக்கு தாம்பரம், சேலையூர், செம்பாக் கம், மாடம்பாக்கம் பகுதிகளில் வெயில் சுட்டெரித்தது. பிற்பகல் திடீரென கருமேகம் சூழ்ந்தது. குளிர்ந்த காற்று வீசியது. ஒரு சில இடங்களில் இடியுடன் மழைபெய்தது. ஆங்காங்கே மழைநீர் தேங்கியதால் வெயிலின் தாக்கம் குறைந்தது.

## சர்வதேச தடையால் ஈரானில் உணவுப்பொருட்கள் விலை கடுமையாக உயர்வு



டெஹ்ரான் : சர்வதேச பொருளாதார தடையால், ஈரானில் உணவுப் பொருட்கள் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. இதனால் பொதுமக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு நாடுகளின் எச்சரிக்கையையும் மீறி, ஈரான் அணு ஆயுதச் சோதனையில் ஈடுபட்டு வந்தது. இதையடுத்து, அந்நாட்டின் மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டது. ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளின் கப்பல்களுக்கு இன்சூரன்ஸ் செய்யப்பட மாட்டாது

என்றும் அறிவிக்கப்பட்டது. எனினும், இந்தியா தொடர்ந்து ஈரானில் இருந்து கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்துக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில், தற்போது பொருளாதார தடையால் ஈரானில் உணவுப் பொருட்கள் விலை பல மடங்கு உயர ஆரம்பித்துள்ளது. குறிப்பாக சமையல் எண்ணெய், முட்டை, இறைச்சி, பழங்கள் உள்ளிட்டவற்றின் விலை 60 சதவீதம் வரை உயர்ந்துள்ளதாக, தலைநகர் டெஹ்ரானில் இருந்து வெளியாகும், 'கேஹன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானில் வரும் ஜூன் 14ல் அதிபர் தேர்தல் நடக்க உள்ள நிலையில், உணவுப் பொருட்கள் விலை அதில் எதிரொலிக்கும் என்று அப்பத்திரிகை செய்தியில் கூறப்பட்டுள்ளது.
முன்பு ஒரு அமெரிக்க டாலருக்கு 12,260 ரியால்கள் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் பொருளாதார தடைக்கு பின்னர் நிலைமை மாறிவிட்டதால் தற்போது ஒரு டாலரை பெற 24,500 ரியால்கள் கொடுக்கப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க டாலரை தந்தால் மட்டுமே வர்த்தகர்கள் உணவுப் பொருட்களை தருகின்றனர் என்பதால், அதை பெறுவதற்கு கூடுதல் விலை கொடுக்க வேண்டிய நிலை ஈரான் வர்த்தகர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

23.04.2013 A.M

## போடி பகுதியில் இடி மின்னலுடன் பலத்த மழை: சூறைக்காற்றில் பப்பாளி,வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து நாசம் மக்காச்சோள பயிர்களும் சாய்ந்து சேதம்

உப்புக்கோட்டை

போடி பகுதியில்நேற்று முன்தினம் இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. சூறைக் காற்றில் பப்பாளி, வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து நாசம் அடைந்துள்ளன. மக்காச்சோள பயிர்களும் சாய்ந்து சேதம் அடைந் துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**சூறாவளி காற்று**

தேனி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கோடை வெயில் கொளுத்தி வருகிறது. இதன் காரணமாக மாவட்டத் தின் முக்கிய நீர் ஆதாரமாக திகழும் முல்லைப்பெரியாறு, வைகை, மஞ்சளாறு, சோத்துப் பாறை ஆகிய அணைகளின் நீர் மட்டம் குறைந்து காணப் படுகின்றன. மேலும் குடிநீர் ஆதாரமான ஆறுகளிலும் தண்ணீர் வரத்து இல்லாததால் நகர் மற்றும் கிராமப்பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையும் ஏற்பட தொடங்கி உள்ளது.

குறிப்பாக விவசாயம் செழித்து காணப்படும் தேனி மாவட்டத்தில் தற்போது கோடை சாகுபடியே கேள்விக் குறியான நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் கடந்த ஒரு வார காலமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அங்கும், இங்குமாக கோடை மழை பெய்து வருகிறது. நேற்று முன் தினம் போடி சுற்றுவட்டார பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது. சூறைக்காற்றும் சுற்றி அடித் தது. சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக இந்த மழை நீடித்தது.

**மக்காச்சோள பயிர்கள்**

இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. மழையுடன் கூடிய சூறாவளி காற்றினால், போடி சுற்று வட்டார பகுதிகளான உப்புக்கோட்டை, டொம்புச் சேரி, பாலார்பட்டி, காமராஜ புரம், பத்ரகாளிபுரம், சடை யால்பட்டி ஆகிய கிராமங் களில் சுமார் 600 ஏக்கர் பரப்

பளவில் பயிரிடப் பட்டு கதிர் விட்ட பருவத்தில் அறு வடைக்கு தயாராக இருந்த மக்காளச்சோள பயிர்கள் அடியோடு சாய்ந்து நாசம் அடைந்தது. மேலும் உப்புக் கோட்டையில் லட்சுமி வாசன் என்ற விவசாயியின் தோட் டத்தில் 1,200 பப்பாளி மரங் களில் காய் காய்க்கும் மேல் பகுதி முற்றிலுமாக ஒடிந்து நாசம் அடைந்தன. இதனால் பப்பாளி மரங்கள் மொட்டையாக காட்சி அளித்தன.

வாழைகள் சேதம்

இது தவிர பாலார்பட்டி, குண்டல்நாயக்கன்பட்டி, கூழையனூர், உப்புக்கோட்டை மற்றும் சுற்றுவட்டார கிராமங் களில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழைகள் அடி யோடு சாய்ந்து நாசம் அடைந் தன. சேதம் அடைந்த பகுதி களில் உப்புக்கோட்டை கிராம நிர்வாக அலுவலர் ஜெய ராமன், ஊராட்சி தலைவர் சகுந்தலா ராமசாமி, துணைத் தலைவர் மூர்த்தி மற்றும் வரு வாய்த் துறையினர் பார்வை யிட்டு சேத விவரங்களை சேகரித்தனர்.

பருவமழை தவறியதன் காரணமாக பாசனம் இன்றி பரிதவித்து வந்த விவசாயிகள், தற்போது பெய்து வரும் சூறைக்காற்றுடன் கூடிய கோடை மழையால் மேலும் பாதிக்கப்பட்டு வருவது வேதனைக்குரியது ஆகும்.

## பட்டுப்புழு உற்பத்தியை அதிகரிக்க தீவிர நடவடிக்கை பட்டுவளர்ச்சி துறை உதவி இயக்குனர் தகவல்

சிவகங்கை

சிவகங்கை மாவட்டத் தில் பட்டுப்புழு உற்பத் தியை அதிகரிக்க தீவிர நடடிக்கை எடுக்கப் பட் டுள்ளது என்று பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் நடராஜன் கூறினார்.

**பட்டு தொழில் நுட்ப சேவை மையம்**

பட்டுவளர்ச்சி துறை உதவி இயக்குனர் நடராஜன் விடுத் துள்ள அறிக்கையில் கூறியிருப் பதாவது:–

சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கையை தலைமையிட மாக கொண்டு பட்டு தொழில் நுட்ப சேவை மையம் அமைக் கப்பட்டுள்ளது. இதில் சிவ கங்கை, காளையார்கோவில், சிங்கம்புணரி ஆகிய 3 இடங் களில் களப்பணியாளர்கள் விரிவாக்க பணியினை செய்து வருகிறார்கள். இந்த

மாவட் டத் தில் 53 விவசாயிகள் தற் போது, 93.50 ஏக்கர் பரப் பளவில் மல்பெரி பயிரிட்டு புழு வளர்ப்பு செய்து வரு கிறார்கள்.

2012–13ம் ஆண்டில் 11 ஆயிரத்து 254 கிலோ பட்டு கூடுகள் உற்பத்தி செய்யப்பட் டுள்ளது. 100 பட்டு முட்டை தொகுதிக்கு சராசரியாக 67 கிலோ பட்டு கூடுகள் அறு வடை செய்யப்பட்டுள் ளது. இதன் மூலம் 34 லட்சத்து 88 ஆயிரம் மதிப்பிற்கு கூடுதல் விற்பனை செய்யப்பட்டுள் ளது. 2012–13ம் ஆண்டில் நிலை 2ல் புழுவளர்ப்பு மனைக்கு ரூ.75 ஆயிரம் வழங் கப்பட்டுள்ளது.

**வளர்ப்பு மனை**

மேலும் தமிழக முதல்– அமைச்சர் உத்தரவின்படி நடைபெற்று வரும் உழவர் திருவிழா நிகழ்ச்சிகளில் பட்டு புழு வளர்ப்பு மனை கட்டப் பட்டு வருகிறது. புழு வளர்ப் பினை விவசாயிகள் விரும்பி ஏற்று அதிகப்படியான லாபம் பெற்று வருவதால் இந்த தொழி லில் ஈடுபட அதிக அள வில் வாய்ப்பு ஏற்பட்டுள் ளது.

மேலும் சிவகங்கையில் பட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டு கூடுகளை கொள்முதல் செய்ய பட்டு கூடு அங்காடி மற்றும் பட்டு நூற்பகம் செயல்பட்டு வரு கிறது. இதன் மூலமாக 13 ஆயிரத்து 114 கிலோ கூடுதல் விற்பனை செய்யப்பட்டு 883.300 கிலோ பட்டு நூல் உற்பத்தி செய்யப்பட்டுள் ளது.

**மாதிரி பட்டு பண்ணை**

இது போல் குன்றக்குடியில் உள்ள மாதிரி பட்டுபண்ணை மூலமாக 2012–13ம் ஆண்டில் ஒரு லட்சத்து 85 ஆயிரத்து 500 நாற்றுகள் உற்பத்தி செய் யப்பட்டுள்ளது. இதன் மூலம் 50 பேர்களுக்கு பயிற்சி அளிக் கப்பட்டுள்ளது. இந்த பண் ணையில் இருந்து ஒரு லட்சத்து 80 ஆயிரத்து 600 வருமானம் கிடைத்துள்ளது. ஒக்கூர் புதூரில் உள்ள செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையத்தில் கடந்த ஆண்டு ஒரு லட்சத்து 20 ஆயிரம் நாற்றுக்கள் உற் பத்தி செய்யப்பட்டுள் ளது.

அத்துடன் 50 விவசாயி களுக்கு பயிற்சி அளிக்கப்பட் டுள்ளது. பண்ணையில் வரு மானம் ரூ.ஒரு லட்சத்து 16 ஆயி ரத்து 505 கிடைத்துள்ளது. இந்த மாவட் டத்தில் பட்டு புழு வளர்ப்பின் மூலமாகஅதிக லாபம் பெறும் நிலை உள்ள தால் வரும் ஆண்டுகளில் கூடுதலாக விவசாயிகள் ஈடு படுவார்கள் என்று எதிர்பார்க் கப்படு கிறது.

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

## அன்னவாசல் பகுதியில் உள்ள கிராமங்களில் உழவர் பெருவிழா

இலுப்பூர்

அன்னவாசல் பகுதியில் உள்ள 4 கிராமங்களில் உழவர் பெருவிழா நடந்தது. இதில் கலந்து கொண்ட விவசாயி களுக்கு வேளாண்துறை சார்பில் மின் மோட் டார் மற்றும் வேளாண் கருவி கள் மானிய விலையில் வழங்கப்பட்டன.

**உழவர் பெருவிழா**

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் பகுதியில் உள்ள ராப்பூசல், வெட்டுக்காடு, வீரப்பட்டி, வெள்ளாஞ்சார் ஆகிய 4 கிராமங்களில் வேளாண் துறை சார்பில் உழவர் பெருவிழா நடைபெற்றது. ராப்பூசலில் நடைபெற்ற விழாவிற்கு ஊராட்சித் தலைவர் கீதாவிஜயகுமார், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சேதுராமன், வெட்டுக்காட்டில் நடைபெற்ற விழாவிற்கு ஊராட்சித்தலைவர் திருமலை வீரப்பட்டி வருவாய் கிராமத்தில் நடைபெற்ற விழாவிற்கு ஊராட்சி மன்ற தலைவர் ஈஸ்வரி தங்கராஜ், வெள்ளாஞ்சார் கிராமத்தில் நடைபெற்ற விழாவிற்கு ஊராட்சி மன்ற தலைவர் ராசு, ஒன்றியக்கவுன்சிலர் குண்டு மழவராயர் ஆகியோர் தலைமை தாங்கினர்.

மின் மோட்டார், வேளாண் கருவிகள் வழங்கப்பட்டன.

வேளாண் அலுவலர் சுமித்ராதேவி வரவேற்று பேசினார். வேளாண் திட்டங்கள் மற்றும் செயல் விளக்கங்கள் பற்றி வேளாண் உதவி இயக்குநர் சிங்காரம் பேசினார். விழாவில் விவசாயிகளுக்கு மின் மோட்டார் மற்றும் வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டன.மேலும் ஒருங்கிணைந்த கையேடுகள், தொழில்நுட்ப கையேடுகள், தொழில்நுட்ப பிரசுரங்கள் நுண்சத்துக்கள் கைத்தெளிப்பான், ஜிப்சம் ஆகிய இடுபொருட்கள் ஆகிய வையும் வழங்கப்பட்டன. ராப்பூசல் மற்றும் வெட்டுக் காடு ஆகிய இடங்களில் 150 மண் மாதிரிகள் விவசாயி களிடமிருந்து சேகரிக்கப்பட் டன.

**மண்மாதிரி, எலி ஒழிப்பு**

விழாவில் உள்ளாட்சி பிரதிநிதி அதிகாரம், முன்னோடி விவசாயி சின்னையா உள்ளிட்ட பலர் முன்னிலை வகித்தனர். இதில் வேளாண்துறை, விதை சான்றளிப்பு துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, அட்மா விரிவாக்க சீரமைப்புத்திட்டம், வேளாண் வணிகம், பொதுப்பணித்துறை, ஆகிய துறைகளை சேர்ந்த அலுவலர்கள் தங்களது துறை சார்ந்த திட்டங்கள் பற்றி சிறப்புரை ஆற்றினர். விழாவில் மண் மாதிரி எடுத்தல், விதை நேர்த்தி செய்தல், எலி ஒழிப்பு, கோனோவீடர் களைக்கருவியை பயன்படுத்தி களைகளை கட்டுப்படுத்தும் முறை, இலை வண்ண

அட்டை பயன்படுத்தும் முறை போன்ற தொழில்நுட்ப செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

**ஆடல், பாடல் நிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு**

விவசாயிகளுக்கான கண்காட்சி வைக்கப்பட்டு இருந்தது. விழாவில் திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகள் மூலம் வேளாண் திட்டங்கள் பற்றிய தொழில் நுட்பங்கள் ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் மூலம் எடுத்து கூறப்படன. நடமாடும் வேளாண்மை விரிவாக்க மையம் ரதம் ராப்பூசல், வெட்டுக்காடு, வீரப்பட்டி மற்றும் வெள்ளாஞ்சார் ஆகிய வருவாய் கிராமங்களுக்கு உள்ளிட்ட பல கிராமங்களுக்கு சென்று வந்தது.

வீரப்பட்டி மற்றும் வெள்ளாஞ்சாரில் நடைபெற்ற நிகழ்ச்சியின் முடிவில் வேளாண் உதவி அலுவலர் மணிவேல் நன்றி கூறினார். ராப்பூசல் மற்றும் வெட்டுக்காட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியின் முடிவில் வேளாண் உதவி அலுவலர் ராஜ்குமார் நன்றி கூறினார். விழாவிற்கான ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

## நீலகிரி மாவட்டத்தில் உழவர் பெருவிழா

ஊட்டி,

நீலகிரி மாவட்டத்தில் உள்ள பல்வேறு இடங் களில் நடைபெற்ற உழ வர் பெரு விழாவில் விவ சாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கரு விகள் வழங்கப்பட்டது.

உழவர் திருவிழா

ஊட்டி அருகே உள்ள ஓடக் காடு கிராமத்தில் உழவர் திரு விழா நடைபெற்றது. இதில், தொட்ட பெட்டா ஊராட்சி மன்ற தலைவர் ஆதி லட்சுமி தலைமை தாங்கினார். தோட் டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் சாந்திமுன் னிலை வகித்தார். இந்த விழா வில் இளந் தென்றல் கலை குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில்டிரை கோடெர்மா விதை நேர்த்தி, மண் மாதிரி எடுத்தல் நேரடி உரங்கள் பற்றிய செயல் விளக் கங்கள்செய்து காண்பிக்கப்பட் டது. இதற் கான ஏற்பாடுகளை ஊட்டி வட்டார தோட்டக் கலை உதவி இயக்குனர் மீரா பாய், துணை வேளாண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட அலுவ லர்கள் செய்து இருந்தனர்.

மாயார் கிராமம்

மசினகுடி அருகே உள்ள மாயார் கிராமத்தில் உழவர் திருவிழா நடைபெற்றது. இந்த விழாவுக்கு மாயார் முன் னோடி விவசாயி சிவக்குமார் தலைமை தாங்கினார்.
இதில், வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர்சண் முகம் முன்னிலை வகித்தார். துணை வேளாண்மை அலுவ லர் தேசிங்கு வரவேற்புரை யாற்றினார். விழாவில் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் சாந்தி, குன்னூர் உபாசி வேளாண் பொறியியல் நிலைய மகாலிங்கம், வேளாண் வணிகத்துறை, உதவி வேளாண்மை அலுவலர் பரம சிவம், கால்நடை பராமரிப்பு துறை கால்நடை ஆய்வாளர் அய்யப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 25 சதவீத மானியத்தில் வேளாண் கருவிகள் வழங்கப் பட்டது. பின்னர் டிரைகோ டெர்மா விதை நேர்த்தி, மண் மாதிரி எடுத்தல், நேரடி உரங் கள் பற்றிய செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டது.

கிளிஞ்சமந்து கிராமம்

கோடநாடு ஊராட்சிக்குட் பட்ட கிளிஞ்சமந்து கிராமத் தில் உழவர் திருவிழா நடை பெற்றது. இந்த விழாவிற்கு ஊர் தலைவர் நஞ்சாகவுடர் தலைமை தாங்கினார். இதில், சிறப்பு அழைப்பாளராக கோடநாடு ஊராட்சி தலைவர் தேவராஜ் கலந்து கொண்டார். இந்த கூட்டத்தில் தோட்டக் கலைத்துறை ஆராய்ச்சி நிலை யம், உபாசி வேளாண்மை பொறியியல் துறை, ஆவின், வேளாண் விற்பனை துறை மற்றும் விதை சான்று துறை அலுவலர்கள் கலந்து கொண்டு தங்கள் துறை திட் டங்கள் குறித்து எடுத்துரைத் தனர். முன்னதாக தோட்டக் கலை துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் வரவேற்றார். முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் ராமன் நன்றி கூறி னார்.

தருமகிரி- விமலகிரி

கூடலூர் தோட்டக்கலை துறை சார்பில் தருமகிரியில் உழவர் பெருவிழா நடை பெற் றது. இந்த விழாவுக்கு கூடலூர் தோட்டக்கலைதுறை உதவி இயக்குநர் (பொறுப்பு) ஜெய லட்சுமி தலைமை தாங்கினார். ஓவேலி பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி முன்னிலை வகித்தார். உதவி செயற்பொறியாளர்முரு கன், கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் டாக் டர் சந்திர சேகரன், உபாசி கள அலுவலர் அன்பரசு, சொட்டு நீர் பாசன கள அலுவலர் அய் யாக்கண்ணு, வேளாண் விற் பனை துறை உதவி அலுவலர் லட்சுமணன் ஆகியோர் பல் வேறு திட்டங்கள் குறித்து விளக்கி பேசினர். பின்னர் விவசாயிகளுக்கு நுண்ணுயிர் உரங்கள் கொண்டு விதை நேர்த்தி செய்யும் முறை பற்றிய செயல் விளக்கம் வழங்கப்பட் டது.

இதேப்போல் கூடலூர் விமலகிரியில் உழவர் திருவிழா நடைபெற்றது. இந்த விழா வுக்கு ஊட்டி தோட்டக்கலை உதவி இயக்குனர் உமாராணி தலைமை தாங்கினார். கூட லூர் நகர சபை தலைவர் ரமா, கவுன்சிலர் சாரம்மா ஆகி யோர் முன்னிலை வகித்த னர். உதவி மண்வள பாது காப்பு அலுவலர் சுந்தரலிங்கம், கால் நடை பராமரிப்பு துறை ஆய் வாளர் கமல்பாபு, உபாசி கள அலுவலர் அன்பரசு,வேளாண் விற்பனை துறை உதவி அலுவ லர் லட்சுமணன், நுண்ணீர் பாசன நிறுவன அலுவலர் அய்யாக்கண்ணு, அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் யமுனபிரியா ஆகி யோர் தங்களது துறை திட்டங் களை விவசாயிகளுக்கு விளக்கி கூறினர். பின்னர் இஞ்சி விவசாயம் செய்யும் முறை குறித்து அட்மா அலுவ லர்கள் எடுத்துரைத்தனர். முடிவில் உதவி அலுவலர் ராமலிங்கம் நன்றி கூறினார்.

பந்தலூர் பொன்னானி ஜி.டி.ஆர். உண்டு உறைவிட பள்ளி வளாகத்தில் உதவி இயக்குனர் (பொறுப்பு) ஜெய லட்சுமி தலைமையில் உழவர் பெரு விழா நடைபெற்றது. கூடலூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் இந்திராணி, கவுன்சிலர் விஜயன், மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்த னர். உதவி செயற்பொறியாளர் ரவீந்திரன், கால்நடை பராம ரிப்பு துறை உதவி இயக்குனர் டாக்டர் சுரேஷ், உபாசி கள அலுவலர் அன்பரசு, சொட்டு நீர் பாசன கள அலுவலர் அய்யாக்கண்ணு, வேளாண் விற்பனை துறை உதவி வேளாண்மை அலுவலர் லட்சுமணன் ஆகியோர் துறை சார்ந்த சிறப்பு அம்சங்களை விளக்கி கூறினர். பின்னர் விவ சாயிகளுக்கு வாழை கன்று நேர்த்தி செய்யும் முறை பற்றிய செயல் விளக்கம் வழங்கப்பட் டது.

## திருவாரூர் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகள் கலெக்டர் நடராசன் வழங்கினார்

திருவாரூர்

திருவாரூரில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத் திட்ட உதவிகளை கலெக்டர் நடராசன் வழங்கினார்.

### குறை தீர்க்கும் கூட்டம்

திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டஅரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் நட ராசன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் பட்டா மாற்றம், புதிய குடும்ப அட்டை போன் றவை குறித்து 230 மனுக்கள் கொடுக்கப்பட்டன. அவற்றின் மீது உடன் நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அலுவ லர்களுக்கு கலெக்டர் உத்தர விட்டார்.

பின்னர் வருவாய்த்துறை மூலம் கருணை அடிப்படையில் 6 பேருக்கு பணி நியமன ஆணைகளையும், தாட்கோ மூலம் கலெக்டரின் விருப்பு ரிமை நிதி திட்டத்தின்கீழ் 4 இசைக் கலைஞர்களுக்கு ரூ.80 ஆயிரம் மதிப்பிலான இசைக் கருவிகளையும், பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான் மையினர் நலத்துறை மூலம் 4 பேருக்கு ரூ.13 ஆயிரத்து 860 மதிப்பிலான தையல்இயந்திரங் களையும், ரூ.4,245 மதிப்பி லான இலவச சலவை பெட்டி யையும் கலெக்டர் நடராசன் வழங்கினார். கூட்டத்தில் தனித்துணைக் கலெக்டர்கள் லலிதாவதி, தமிழ்ராசன், உதவி ஆணையர்(கலால்) காளி தாஸ், வருவாய் கோட்டாட் சியர் பொன்னம்மாள் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

விவசாயிகளுக்கு பாராட்டு

மேலும் திருவாரூர் மாவட் டம் மகிழஞ்சேரி, மருத்துக்குடி, அன்னியூர், மாவட்டக்குடி ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் மல்பெரி சாகு படியில் 15 நாட்களில் வரு மானம் ஈட்டியுள்ளதையடுத்து மாவட்ட கலெக்டர் சி.நடரா சன் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்தார். அப்போது வேளாண்மை இணை இயக் குநர் மயில்வாகணன், கூட்டு றவு துணைப்பதிவாளர் ரவிச் சந்திரன், பட்

## வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கவேண்டும் விவசாயிகள் சங்க கூட்டத்தில் வலியுறுத்தல்

திருவாரூர்

வறட்சியால் பாதிக்கப் பட்ட கரும்பு விவசாயிக ளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் சங்க கூட் டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

விவசாயிகள் சங்க கூட்டம்

திருவாரூரில் விவசாயிகள் சங்க மாவட்ட குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு அக்பர் தீன் தலைமை தாங்கினார். மாவட்ட பொருளாளர் ராஜ துரை, மாவட்ட குழு உறுப்பி னர்கள் ராஜசேகரன், மாதவன் ஆகியோர் முன்னிலை வகித்த னர். அன்பரசன், குப்புசாமி, சாரநாதன், இளங்கோவன் உட்பட பலர் கலந்து கொண் டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர் மானங்கள் நிறைவேற்றப்பட் டன.

நிவாரணம்

திருவாரூர் மாவட்டத்தை தமிழக அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவித்துள்ளது. இதன் கார ணமாக வறட்சியால் பாதிக்கப் பட்ட நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. ஆனால் வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு எவ் வித நிவாரணமும் வழங்கப்பட வில்லை.

ஆகவே, கரும்பு விவசாயிக ளுக்கு மற்ற பயிர்களுக்கு வழங் கப்படுவதை போல வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.3500 வழங்க வேண்டும். மத்திய அரசு ரெங்கராஜன் பரிந்துரையை ஏற்று இதுவரை சர்க்கரை ஆலைகள் வழங்கி வந்த 10 சதவீதம் லெவி சர்க் கரையை நிறுத்துவதை தடுத் திட வேண்டும்.

வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும். தடையில்லாமல் மும்முனை மின்சாரம் வழங்கி கரும்பு விவசாயிகளை பாதுகாக்க வேண்டும். அனைத்து பிரச்சி னைகளுக்கும் தீர்வு காண முத்தரப்பு கூட்டத்தை அரசு கூட்ட வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

## ஸ்டேட் வங்கியில் விவசாயத்திற்கு கூடுதல் நகைக்கடன் வழங்க வேண்டும் வாடிக்கையாளர்கள் கூட்டத்தில் கோரிக்கை

போளூர்

ஸ்டேட் வங்கியில் விவ சாயத்திற்கு கூடுதலாக நகைக்கடன் வழங்க வேண் டும் என்று வாடிக் கையாளர்கள் கோரிக்கை வைத்தனர்.

**வாடிக்கையாளர் கூட்டம்**

போளூர் ஸ்டேட் வங்கி (மெயின்) கிளையில் வாடிக் கையாளர் கூட்டம் நடைபெற் றது. நிகழ்ச்சிக்கு ஸ்டேட் வங்கி மண்டல மேலாளர் எம்.குண சேகரன் தலைமை தாங்கி னார். முதன்மை மேலாளர்கள் ஏ.எச்.தேவராஜன், கே.எஸ்.பிரபாகரன் பாங்கியின் சட்ட ஆலோசகர் அரிஸ்டாட்டில் ஆகியோர் முன்னிலை வகித் தனர்.

வங்கியின் புதிய மேலாளர் கே.எஸ்.கவுரிசங்கர் வரவேற் றார். மண்டல மேலாளர் எம்.குணசேகரன் பேசிய தாவது:

**குறைகள் களையப்படும்**

ஸ்டேட் வங்கியின் வளர்ச் சிக்கு வாடிக்கையாளர்கள் தான் காரணம். வாடிக்கை யாளர்களின் குறைகள் விரை வில் நிவர்த்தி செய்யப்படும். இங்கு 3 மாதத்திற்கு ஒரு முறை வாடிக்கையாளர்கள் கூட்டம் நடைபெறும் வாடிக்கையா ளர்கள் கூறும் குறைகள் அவ்வப்போது களையப்படும். வாடிக்கையாளர்கள் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும்.

வங்கியில் டிபாசிட் செய் தும் கடன் உதவிகள் பெற்றும் பயன்பெற வேண்டும். தற் போழுது நிலவும் நவீன தொழில் நுட்பங்களை பயன் படுத்தி அனுகூலங்கள் பெற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசி னார்.வாடிக்கையாளர்கள் பேசுகை யில் கூறியதாவது:

**கூடுதல் கடன்**

விவசாயத்திற்கு நகைக் கடன் கூடுதலாக வழங்க வேண்டும். பென்ஷன்தாரர்க ளுக்கு கடன் வழங்க வேண்டும். ஏ.டி.எம். மையம் கூடுதலாக அமைக்கப்பட வேண்டும். பாங்கியில் பரிவர்த்தனைகள் காலதாமதம் ஆவது தவிர்க்கப்பட வேண்டும். வாடிக்கையா ளர்களை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்று பேசினர்.

கூட்டத்தில் அரிமா சங்க மாவட்ட தலைவர்கள் மகேந் திரகுமார், பிரேம்சந்திரன், அரிமா சங்க தலைவர் சுரேஷ், ரோட்டரி சங்க முன்னாள் தலைவர் ராஜேஷ்ஜெயின், டாக்டர் விஸ்வநாதன், சக்தி கங்காரமேஷ், ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி பழனி மற்றும் பலர் கலந்து கொண்டனர். முடிவில் வங்கி ஊழியர் சங்க செயலாளர் நரசிம்மன் நன்றி கூறினார்.